# "இராணுவ நடவடிக்கையை தவிர வேறு வழியில்லை"

## அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் இராணுவ நடவடிக்கையே தமது பதிலாக இருக்குமென்று நீதி அமைச்சர் ஜி எல். பீரிஸ். தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களுக்கு இராணுவரீதியில் பதிலளிப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை.

இராணுவ செலவீனங்களை அதிகரிக்க அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. நிலைமை சிர

(5ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 23 இதழ் 91

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6 - 5 - 1995

# "புலிகளை சந்திக்கும் பலம் எம்மிடமுண்டு"

[கொழும்பு]

''புலிகளைவிட நாம் பலமானவர்கள். புலிகளை நாம் எப்படியும் தோற்கடிப்போம். அதற்காக நாம் உறுதியும் பூண்டுள்ளோம்''

இராணுவ அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த

(6-ம் பக்கம்பார்க்க!

தாக்குதல் எப்போது எனக் கூறமுடியாது

# வடக்கு-கிழக்கில் பாரிய போர்

# நடவடிக்கைக்கு படைகள் தயார்!

## இராணுவ பேச்சாளர் தகவல்

[கொழும்பு]

விடுதலைப்புலிகளுக்கு எதிராக வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாரிய போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இராணுவந் பேச்சாளர் மேலும்தெரிவித்துள்ளவாவது விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு படையினர் தயாராகி வருகின்றனர்.

இதன்படி புலிகளுக்கு எதிராக போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் படையினர் இப்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்செய்வ

(6-ம் பக்கம் பார்க்க)

## மணலாறு மோதலில் நான்கு ராணுவம் காயம்

[கொழும்பு]

மணலாறு காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நேற்று இடம்பெற்ற மோதலொன்றில் நான்கு இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில காயமடைந்த படையினர்அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

மணலாறு காட்டுப்பகுதியில் ரோந்துசென்த இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் எதிர்பாராமல் சந்தித்ததையடுத்து இம்மோதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

வி-ரி

## நீண்ட, குறுகிய கால தாக்குதல்கள் நடத்த இராணுவத்தினர் திட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக, கட்டம் கட்டமாகப் பல தாக்குதல்களை நடாத்தத் தாம் திட்டமிட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது நீண்டகாலம் குறுகியகாலம் என இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளும் விதத்தில் படையினர் செயற்பட்டு வருகிறார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

## கம்பன் விழா நேற்று நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா 15ம் ஆண்டு நிறைவு விழா நல்லூரில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 4-30 மணிக்கு கீழைத்தேய பாண்ட் வாத்தியங்கள் சகிதம் மங்கள இசை முழங்க கம்பனின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது.

ஊர்வலம் விழாப் பந்தலை அடைந்ததும் கம்பனின் உருவப்படம் சம்பிரதாயபூர்வமாக விழாப் பந்தலில் வைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து முதல்நாள் நிகழ்வு ஆரம்பமானது.

இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி

(6ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் நேற்று பெரு வெள்ளம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை பெய்த பலத்த மழை காரணமாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதில் போக்குவரத்து தடைப்பட்டது, இதேவேளை தென் பகுதியில் பல பாகங்களில் பலத்த மழை பெய்தது.

தற்போது நிலவும் தாழமுக்கநிலை, இன்று நாட்டின் மேற்குப் பகுதிக்கு நகர்ந்து இறுதியில் இந்தியாவில் மேற்கு கரையோர பகுதியை சென்றடையும் என காலநிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

கே-ரி

## ராணுவதலைமை அதிகாரிலக்கி அல்கம ஓய்வுபெற ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

சிறிலங்காவின் இரண்டாவது அதிஉயர் இராணுவ தளபதியானராணுவ தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பதவியிலிருந்து ஓய்வு பெற ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

தற்போதைய ராணுவ தளபத ஜெரி டி சில்வாவை அடுத்து ராணுவ தளபதியாக நியமிக்கப்பட சிபார்சு செய்யப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு துறைமுக பாதுகாப்பு அதிகரிப்பு

[கொழும்பு]

கொழும்பு துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாக பாதுகாப்புத் துறையினருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்திருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

புலிகளின் இந்த தாக்குதல் அச்சுறுத்தலையடுத்து கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் கடுமையாக்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளம் பெண் சயனைட் அருந்தி தற்கொலை செய்ததையடுத்து கொழும்பில் பாதுகாப்பு நட

(6-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ரயில், பஸ் வண்டிகளில் படையினர் செல்வதற்கு தடை

[மட்டக்களப்பு]

கிழக்கு மாகாணத்தில் படையினர் விடுமுறையில் செல்கையில் ரயில் மற்றும் பஸ் வண்டிகளில் செல்ல படைத் தலைமை தடை விதித்துள்ளது,

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக இத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது,

கிழக்கு மாகாணத்தில் பணியில் ஈடுபட்டுள்ள பொலிசாரும் முப்படையினரும் விடுமுறையில் செல்கையில் ரயில் மற்றும் பஸ் வண்டிகளில் பயணம் செய்யக்கூடாது எனவும்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்களுக்கு ஜூன்மாத சம்பளத்துடன் புதிய சம்பளம் கிடைக்கும்

(உடுவில்)

இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து அமுல் படுத்தப்படவுள்ள ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டமானது ஜூன் மாத சம்பளப்பட்டியலுடன் ஆசிரியர்களுக்கு கிடைக்கக் கூடியதாக திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய சம்பளத் திட்டத்துக்கமைவாக ஆசிரியர்களை உள்வாங்கும் வேலைகள் கல்விக் கோட்டங்களூடாக துரிதகதியில் நடைபெற்று வருகின்றன

நிரந்தர ஆசிரியர் சேவையிலுள்ள சகல ஆசிரியர்களும் நான்கு வகையினராக பிரிக்கப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவையில் 6. 10 94 முதல் உள்வாங்கப்பட வேண்டுமென கல்வி உயர்கல்வி அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராசா கோட்டக் கலவி அலுவலக அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துளள சுற்று நிறுபத்துக்கமைய ஆசிரியர்களை உள் வாங்கும் வேலைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்கள் யாவரும் அவர்களுடைய கல்வித் தகைமை, சேவை அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2 தரம் ஒன்று, வகுப்பு 2தரம் 2, வகுப்பு 3தரம் ஒன்று, வகுப்பு 3தரம் 2என நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட வேண்டுமெனவும், இப் பிரிவுக்குரிய ஆசிரியர்களை உள்வாங்கி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுடைய சுய விபரக் கோவையுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டு கோட்டக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டு மெனவும் திரு. க. தியாகராசா அறிவித்துள்ளார்.

கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூலம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் ஆசிரியர் தர உள்வாங்கல்களுக்கமைய அவர்களின் புதிய சம்பள நியமனக் கடிதங்க அனுப்பி வைக்கப்படும் ஆசிரியர்களின் சம்பளங்கள் 01-01-95ல் இருந்து நிலுவையுடன் வழங்கப்படும்,

இவ் ஆசிரியர் சேவையில் பணிப்பாளர் தரத்தில் உள்ளோர், அதிபர் சேவையில் உள்ளோர், பயிலுனர் ஆசிரியர்கள் உள்வாங்கப்படக் கூடாது.

ஆசிரியர்களுடைய அதிகரித்த வேதனத்தை வழங்குவதற்காக திறைசேரியால் 218மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. 109-சி

---

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1464)

### ரீ மேக்கர் தேவை

அனுபவமுள்ள ரீ மேக்கர் தேவை அப்பம் போடுவதில் அனுபவம் இருப்பின் முன்னுரிமை அளிக்கப்படும். ரவர் கோப்பி பார், 324 மணிக் கூட்டுக்கோபுர வீதி யாழ்ப்பாணம். (ஏ-4912)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி முதல்அரையாண்டுப் பரீட்சை 1994

மேற்குறிப்பிட்ட பரீட்சை யூன் மாதம 19ஆம், 20ஆம், 21அம், 22ஆம் திகதிகளில் தினமும் பி.ப. 1-00மணிக்கு நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 25-05-95க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

— பதிவாளர்

(ஏ-4911)

---

# உற்பத்தியில் தன்னிறைவு காண விவசாயிகளுக்கு உதவவேண்டும்

(பண்டத்தரிப்பு)

"விவசாய உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கு விவசாயத்தில் ஈடுபட்ட மக்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது அவசியம், பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் எமது பிரதேச விவசாயிகளுக்கு யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் ஆற்றி வரும் உதவிகளை பாராட்டாமல இருக்கமுடியாது"

இவ்வாறு யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் இவ்வருடத்திற்கான விவசாய விழா அண்மையில் உரும்பராய் சைவ தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் பிரதமஅதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ், மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு. நா. சிவலோகநாதன் குறிப்பிட்டார்.

மன்ற உபதலைவர் திரு. த. சீவரந்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேச செயலாளரும், மேலதிக யாழ், மாவட்ட அரசாங்க அதிபருமான திரு. து. வைத்திலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றுகையில், தமது பிரதேச செயலர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் பல்வேறு கடனுதவித் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது, விவசாயிகள் தாம் பெற்ற கடனுதவி மூலம் பொருளாதார அபிவிருத்தியை பெற்று பயனடையவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் திரு சி. ரவி உரையாற்றுகையில், விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை சேமித்து வைத்து தட்டுப்பாடான காலங்களில் விற்பனைக்கு விடுவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும என்றும் குறிப்பிட்டார்.

கட்டுடை சமூக அபிவிருத்தி கழக தலைவர் திரு. க. முதலியார் உரையாற்றுகையில், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் கஷ்டங்களையும் விளக்கி அரச சார்பற்ற நிறுவனங்களும் விவசாய திணைக்களமும் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விதை தானியங்கள், உரவகைகள் கிருமி நாசினிகள் மற்றும் எரிபொருள்கள் ஆகியனவற்றை சகாய விலையில் பெறுவதற்கு உதவியெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நெற்செய்கையில் சிறந்த விளைச்சலைப்பெற்ற 16 விவசாயிகளுக்கும், மேட்டு பயிர்ச செய்கையில் சிறந்த விளைச்சலைப்பெற்ற 9விவசாயிகளுக்கும் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. 72

---

# அநேகமான வீதிகள் குன்றும் குழியுமாக காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள அனேகமான வீதிகள் மக்கள் பயணம் செய்ய முடியாதவாறு குன்றும் குழியுமாக மிக மோசமாகப் பழுதடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. யாழ். காங்கேசன்துறை பிரதான வீதி மிக மோசமாகக் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது.

வலிகாமம் பகுதியின் மல்லாகம், சுன்னாகம், இணுவில், அளவெட்டி ஆகிய பகுதியில் இருந்து அநேகமான அரச திணைக்கள ஊழியர்கள், வர்த்தகர்கள், வர்த்தக நிலைய ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் தொகையான மக்கள் இப்பிரதான வீதி ஊடாகவே யாழ். நகருக்கு வருகை தருகிறார்கள். அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இப்பகுதிகளிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகை தருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இம் மக்கள் அனைவரும் தமது பயணத்துக்கு பிரதானமாக சைக்கிள்களையே பாவித்து வருகிறார்கள். இவ் வீதியின் சீர்கேட்டினால் சைக்கிள்களில் பிரயாணம் செய்வோர் மிக மோசமாகப் பாதிக்கப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இரவுநேரப் பயணம் மிக மோசமாக உள்ளது

162-59-சி

---

# கம்பன் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன்கழக 15வது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் 3ம் நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9-30 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சியில் தலைமை உரையை வண. பிதா நீ.மரியசேவியர் அடிகளும் தொடக்கவுரையை பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரும் வாழ்த்துரையை வடமராட்சி கம்பன்கழக தலைவர் திரு மன்னவன் கந்தப்புவும் நிகழ்த்துவர். இதைத் தொடர்ந்து குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையில் 'கலை தெரி அரங்கம்' சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும். தலைமையுரையை திரு. சி. சிவசரவணபவன் (சிற்பியும்) தொடக்கவுரையை பேராசிரியர் தயா சோமசுந்தரமும், வாழ்த்துரையை வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தமும், யாழ். இந்து ஆசிரியர் திரு. ச. வே. பஞ்சாட்சரமும் நிகழ்த்துவர்.

இதைத் தொடர்ந்து கவிஞர் காரை செ. சுந்தரம் பிள்ளை தலைமையில் 'எண்ணங்கள் விரிந்து எங்கள் இதயங்கள் பேச வண்ணங்கள் தலைப்பாகட்டும்' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெறும், இதில் எட்டுக் கவிஞர்கள் பங்குபற்றுவர்.

-சி

---

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்க

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்:- 07- 5-95 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி

தலைவர்;- திரு. வே. நாகராசா B. Sc. (ஒய்வு பெற்ற அதிபர்)

சிறப்புரை:- எமது கல்லூரி பழைய மாணவர் திரு. கா. சந்திரராசா (மேலதிக அரச அதிபர், வலி-மேற்கு)

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சங்கப் பணியில்
ந. சிவரஞ்சன்
செயலாளர்

சங்கத்தை வாழ்த்துவோர்:-
லீலா வெதுப்பகம், சங்கானை. (சி-1472)

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–06**

சனி இரவு

- 8.02- புரட்சிக்குரல்
- 8.05- நிகழ்வும் பகிர்வும்
- 8.20- நேயர் கடிதங்கள்
- 8 30- செய்திகள்
- 8,40- "பாலைவனங்களின் அமைப்பு" என்னும் தலைப்பில் கலந்துரையாடுவோம்

**1995–05–07**

ஞாயிறு காலை

- 7 20- மாவீரவணக்கம்
- 7,15- களத்தில் மலர்ந்தவை
- 7.30- செய்திகள்
- 7.35- பத்திரிகைச் செய்திகள்
- 7 40- களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05-06**

சனி மாலை

- 5.01- சிந்தனைச்சிதறல்
- 5.02- எழுச்சிகீதம்
- 5.10- புதியவை
- 5·15- வேங்கையின் நெஞ்சம்
- 5.30- அறிவியல் வினாடிவினாப் போட்டிகள்
- 6 00- சிந்தனைக்குச் சில வினாடிகள்
- 6.02- பாமாலை
- 6.15- என் தெரிவு
- 6.30- நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

---

# மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்கக் கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு தலா 3 லீற்றர் மண்ணெண்ணையை லீற்றர் 20 ரூபா விலையில் விநியோகித்து வருகின்றது.

ஒவ்வொரு கிளைக்கும் சில குறிப்பிட்ட தொகை பரல் மண்ணெண்ணையே வழங்கப்பட்டிருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் இந்த மண்ணெண்ணை விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. -72

---

# மாணவர்கள் விவசாய செய்முறையை பார்வையிட்டனர்

(உடுவில்)

கந்தரோடை தமிழ் சந்தையா வித்தியாசாலையின் உயர் வகுப்பு மாணவர்கள் விவசாயக் கல்வி சம்பந்தமாக திருநெல்வேலியில் உள்ள விவசாய திணைக்களத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

விவசாய திணைக்களத்தில் நாற்றுமேடை, பதிவைத்தல் நல்லின மரங்களை ஒட்டும் முறைக்கற்றல் மூலம் அங்குள்ள விவசாய உற்பத்தி அதிகாரிகளால் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மாணவர்கள் விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு சென்று காலநிலையை அளவிடும் கருவிகள், யாழ்ப்பாண குடா நாட்டின் மண்வகைகள் பல்வேறு உற்பத்திப் பயிர்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டுஅறிந்து கொண்டனர்.

அதிபர் திரு. க. செல்வக்குமாரன், விவசாய ஆசிரியர் திரு. க பாலசுப்பிரமணியம் உட்பட சில ஆசிரியர் சகிதம் மாணவர்கள் அங்கு விஜயம் செய்தனர். 109

### மணிவாக்கு

எளிமைதான் அழகுக்கு முக்கிய காரணம். உண்மை எப்போதும் சுருக்கமாகவே பேசப்படுகின்றது. பொய்தான் விரிவாகப் பேசப்படுகிறது.

- லியோ டால்ஸ்டாய்

## நமது நோக்கு

### விமானச் சர்ச்சை!

6-8-45ல் 'இனோலாகே' என்ற அமெரிக்க விமானம் ஜப்பானில் அணுகுண்டை வீசியது; பாரிய அழிவுகள் ஏற்பட்டன. அதன் பின் 2வது உலகப்போர் முடிவுக்கு வந்தது.

போர் முடிவுற்று ஐம்பது ஆண்டுகள் சென்றுவிட்டன. இதனைக் கொண்டாடும் முகமாக அமெரிக்காவில் அரும்பொருட்காட்சியகம் ஒன்றை அமைத்து அணுக்குண்டு வீசிய விமானத்தைக் காட்சிப் பொருளாக வைக்கவேண்டுமென அமெரிக்க அரசு தீர்மானித்தது,

ஆனால்- அந்த விமானத்தோடு வைக்கப்படவுள்ள விளக்கவுரைகள் பல சர்ச்சைகளை கிளப்பியிருக்கிறது.

அமெரிக்க விமானப் படை 1994 ஏப்பிரலில் வெளியிட்ட சஞ்சிகையிலே இந்த விளக்கவுரை வாசகத்தைக் கண்டித்தது. அமெரிக்காவை ஆக்கிரமிப்பு நாடாகப் பிறர் எண்ண வைக்கப்போகின்றது என்ற அச்சத்தையும் வெளியிட்டது.

ஆனால்- காட்சியகத்தை விரிவாக்கி அணுக்குண்டு போடப்பட்டதன் நியாயத்தை விளக்கும் செய்திகள் சேர்க்கப்படத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறிப்பாக- 1930 முதல் ஜப்பான் ஆசியாவில் செய்த ஆக்கிரமிப்புகளை விளக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

சர்ச்சைகள் முடியவில்லை; வாதப் பிரதிவாதங்கள் அமெரிக்காவில் தொடருகின்றன

இருட்டடிப்புகள், திரிபுகள், தீவிர பிரசாரம் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

இரு விமானங்கள் இங்கு வீழ்த்தப்பட்டதும், நடக்கும் பிரசாரம் என்ன?

தீவிரவாதிகள் எனக் கூறப்பட்ட விடுதலைப் போராளிகளைப் பயங்கரவாதிகள் கொடியவர்கள் என வர்ணிக்கத் தொடங்கிவிட்டார்கள்,

1940 முதல் இலங்கைத் தமிழர்களை ஒடுக்க எடுத்த மறைமுக நடவடிக்கைகளையும், 1956 முதல் நேரடியாகவே கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலைகள், சொத்துக்கள் நாசம் செய்யப்பட்ட கொடூரங்கள் எல்லாம் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் உயிர்வாழ நடாத்தும் நியாயப் போராட்டம் பயங்கரவாதம் எனத் திரித்துக் கூறப்படும் பிரசாரம் கண்டிக்கப்படவேண்டியதே!

# சத்துருக்கொண்டான் கிராமத்தவர் அனைவரையும் படையினர் கொன்றனர்

## - தப்பியவர் சாட்சியம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான காலத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரேஒரு தமிழர் மாத்திரமே தப்பியுள்ளார். ஏனைய அனைவரும் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; விசாரணை என்ற பெயரில் கொண்டு செல்லப்பட்ட சத்துருக்கொண்டானில் வாழ்ந்த சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட அக்கிராமத்தில் வாழ்ந்த 185 பேரும் மிகக் கொடூரமான முறையில் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்

காணமற்போனோர் தொடர்பான விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த குறித்த படுகொலைச் சம்பவத்தில் இருந்து தப்பிய இளைஞர் ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டார்.

கிழக்கில் இடம்பெற்ற பல படுகொலைகள் குறித்தும் காணமல் போனோர் பற்றி தகவல்களை வெளியிடவும் அச்சம் காரணமாக பலர் மௌனம் சாதித்துவருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. -ம-சி

### புதிய முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக்கிளையின் புதிய முகாமையாளராக 2-ம் திகதி தொடக்கம் திரு. ஐயாத்துரை கணேசலிங்கம் பொறுப்பேற்றுள்ளார் இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். மணிக்கூட்டுவீதி அரசடிப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத்தலைவருமாவார்.

இக்கிளையில் இதுவரை முகாமையாளராகப் பணிபுரிந்த திரு. சி சுந்தரலிங்கம் நெல்லியடிக் கிளைக்கு மாற்றம் பெற்றுள்ளார். -சி

### பலதும் பத்தும்

#### பேர்லின் ரயில்

ஜேர்மனியில்... பிராங்போர்ட்டிலிருந்து ஹைடல் பார்க்கிற்குப் போகும் வழியில் உள்ள நினைவுச்சின்னம் பற்றிஅங்கு வசிக்கும் யாழ்ப்பாண நண்பர் தந்த தகவல் தற்போதைய சூழலில் பொருத்தமானது.

அந்த நினைவுச் சின்னத்தின் பெயர் ''பேர்லின் ரயில்''. ஆனால் அங்கு வைக்கப் பட்டிருப்பதோ ஒரு விமானம்!

இரண்டாம் உலகப் போருக்குப் பின்... 1948 - 49ம் ஆண்டுக் காலப்பகுதியில்... மேற்கு ஜெர்மனிக்கு எந்தப் பொருளும் போகாது தடைபோட்டார்களாம் ருஷ்யர்கள் அப்போது அந்த விமானம் மூலமே... அடுப்பெரிக்கும் கரி முதல் குழந்தைகள் சட்டைவரை பல்வேறு பொருட்களும் கடத்திவரப்பட்டன. அமெரிக்காவே இந்தக் 'கடத்தல்' முயற்சிக்கு உதவியதாம்!

உலகில்... பல்வேறு நாடுகளில்... பொருளாதாரத் தடைகள் எப்படியெல்லாம் முறியடிக்கப்பட்டிருக்கின்றன!

— மயூரன்

## இராசி பலன்

06-05-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை—23)

ஷஷ்டி முற்பகல் 10 மணி, புனர்பூசம் முற்பகல் 9 49 வரை, சித்தயோகம், ராகு காலம் காலை 8-56 முதல் 10-26 வரை சுபவேளை மாலை 5-56 முதல் 7-26 வரை

மேடம், பிறர்தயவு. குறை கேட்டல், வேலைக்கஷ்டம்

இடபம்: பெரியோர் பாராட்டு, தாய்வழிநினைவு, சுபசெய்தி

மிதுனம்: பிரிந்தவர்கவலை, பொருள் நஷ்டம், குளப்பம்

கடகம்- புதிய முதலீடு, இனசன உதவி, கூடிப் பேசுதல்,

சிங்கம்: தொழில்பகைமை தாழ்ந்த நிலை. அலைச்சல்

கன்னி: குடும்பசுகம், உணர்வலைகள், நண்பர் சகவாசம்

துலாம்: அதிகாரிகள்பாராட்டு. பிரச்னைக்குத் தீர்வு பணவரவு

விருச்சிகம்: முயற்சிதாமதம், தாயார் துன்பம், கோபப்படல்

தனுசு- பலருடைய பகைமை, ஏமாற்றம், மனக்கவலை

மகரம்: விரோதிகளை ஜெயித்தல், நோய்தணிவு, சுபகாரியம்

கும்பம்- தொழில் லாபம், பெற்றோர் பிரிவு, தெய்வீக சிந்தனை

மீனம்: மனப்போராட்டம், எதிர்பாராத துன்பம், தர்க்கப் படல்.

- ஜோஸ்யர்

# நேபாளத்தில் முப்படைகளின் தலைவர் பதவியிலிருந்து ராஜினமா செய்தார்

[காட்மண்டு]

நேபாளத்தின் றோயல் ராணுவத்தில் பெரியதொரு லஞ்ச ஊழல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பொறுப்பு ஏற்று முப்படைகளின் தலைவர் பதவி விலகியுள்ளார். பாதுகாப்புப் பேரங்களில் அரசுக்கு பெருத்த இழப்பை உண்டாக்கியதற்காக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல ஒருவருக்கு 4 ஆண்டு சிறைத்தண்டனையும், ஒரு கோடி ரூபாவுக்கு மேல் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு கேணல், ஒரு லெப்டினன்ட் கேணல் உட்பட வேறு நான்கு இராணுவ அதிகாரிகளை இராணுவ நீதிமன்றம் பதவியிலிருந்து நீக்கியுள்ளது.

நேபாளத்தின் வரலாற்றில் இராணுவத்தில் இவ்வாறான தொரு ஊழல் இடம்பெற்றது இதுவே முதல் தடவையாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -ம-சி

# கொழும்பில் தேடுதல் வேட்டை 300 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பில் பொலிசார் கடந்த சில தினங்களாக நடத்திய திடீர் தேடுதல் வேட்டையின்போது 300க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் இலக்காக கொழும்பை தேர்ந்தெடுக்கக்கூடும் என்ற அச்சத்திலேயே மேற்படி கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக லொட்ஜ்களில் அதிக வாடகை கொடுத்துத் தங்கும்தமிழ் இளைஞர்கள் மீது பொலிசார் விசேடகண்காணிப்புசெலுத்தி வருவதாகவும்சந்தேகத்திற்குரியோர் கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்

உணவுச்சாலைகளில் உணவு அருந்திக் கொண்டிருந்தோர் உட்பட பலரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. -க-இ

# தாண்டிக்குளத்தில் பயணிகள் மீது படையினர் பலத்த கெடுபிடி

[வவுனியா]

வவுனியா தாண்டிக்குளத்தில் பயணிகள் வடபகுதிக்குக் கொண்டுவரும் தடைநீக்கப்பட்ட பொருட்களைக்கூட அனுமதிப்பதற்குஇராணுவத்தினர் பல கெடுபிடிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

எந்த ஒரு பொருளையும் வடபகுதிக்குக் கொண்டுவர அனுமதி வழங்க இராணுவத்தினர் பின்னடிக்கின்றனர், இதனால் சோதனை முகாமில் தமிழர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

சில பொருட்களைக் கொண்டுவருவோர் படையினரின் கடும் தாக்குதலுக்கு இலக்காவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தடைமுகாமில் தினமும் பெருமளவு தமிழர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு வருவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

-ம-சி

# தமிழகத்தில் நடந்த ஹர்த்தால் பூரணவெற்றியளித்துள்ளதாம்

(கொழும்பு)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை பதவிவிலகக்கோரி நேற்று முன்தினம் தமிழ்நாடெங்கும் பூரண ஹர்த்தால அனுஷ்டிக்கப்பட்டது. இது பெரும் வெற்றியளித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஹர்த்தாலில் ஒரு சில கல்லெறிச் சம்பவங்கள் இடம்பெற்றதென்றும் வேறு அசம்பாவிதங்கள் இடம் பெறவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு தனியார் வாகனங்கள் எதுவும் ஓடாது வீதிகள் வெறிச்சோடி இருந்தன. ஆங்காங்கே ஒரு சில அரசு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன.

ஹர்த்தால் பூரண தோல்வி என்று தமிழ் நாடு முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளபோதும் ஹர்த்தால் பூரண வெற்றியளித்தாகவும் முதலமைச்சர் உடனடியாக பதவிவிலக வேண்டுமென்று குமரி ஆனந்தன், வாழப்பாடி ராமமூர்த்தி மு. கருணாநிதி, வை. கோபாலசாமி, எம். ராம்தாஸ் ஆகிய பல எதிர்க்கட்சித் தலைவர்கள் செல்வி ஜெயலலிதாவை கேட்டுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன

எதிர்க்கட்சிகளின் இந்த ஹர்த்தாலையொட்டி தமிழக பொலிஸார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை கைது செய்து தடுத்து வைத்ததும் தெரிந்ததே. ம-சி

# சுருக்கெழுத்தாளர்க்கான போட்டிப் பரீட்சை

[திருநெல்வேலி]

அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்களுக்கு சுருக்கெழுத்தாளர்களை ஆட்சேர்ப்பதறகான போட்டிப் பரீட்சை இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்களுக்கு சுருக்கெழுத்தாளர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டு

(4ம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கான போட்டியிலிருந்து இலங்கை விலகியது

(கொழும்பு)

ஆசிய நாடுகளின் சார்பாக ஐக்கிய நாட்டுச் சபையின் 1995ம் ஆண்டு காலப்பகுதிக்கு, இலங்கை வேட்பு மனு போடால் விலகிக்கொண்டதில், நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாட்டு ஆசிய பிரதிநிதிகளிடையே ஏமாற்றத்தை கொடுத்துள்ளதாக டாக்டர் ஸ்ரான்லி கல்பகே சண்டே ஐலண்டுக்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

டாக்டர் ஸ்ரான்லி கல்பகே 1991-94 காலப்பகுதியில் ஐ. நா. வில் இலங்கைக்கான நிரந்தர தூதுவராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் அக்கட்டுரையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை, ஐ. நா. வில் 1955ம் ஆண்டிலிருந்து அங்கம் வகித்து வருகிறது. கடந்த 40 ஆண்டு காலப் பகுதியில் ஒரு முறைதான், 1960-61ல் இலங்கை பாதுகாப்பு சபையில் சேவை புரிந்தது அதேவேளை இந்தியா 6 முறையும், பாகிஸ்தான் 5 முறையும், நேபாளம் 2 முறையுமாக ஆசிய குழு சார்பாக பதவி வகித்துள்ளன.

கடந்த 34 வருடமாக பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெற முனைந்தும், இலங்கை பாகிஸ்தான் அல்லது இந்தியாவுக்காக விட்டுக் கொடுத்து போட்டியிலிருந்து விலகி நின்றது.

உதாரணமாக 1982ல் பாகிஸ்தானுக்காகவும், 1990ல் இந்தியாவுக்காகவும் விட்டுக் கொடுத்தபோது அந்நாடுகள் வருங்காலத்தில் இலங்கை போட்டியிடும்போது நன்றி செலுத்தும்முகமாக உதவுவதென உறுதியும் அளித்திருந்தன.

ஐ. நா. விலுள்ள ஆசிய குழு, கிழக்காசிய, தெற்காசிய மேற்காசிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அங்கம்பெறும் விதமாக ஒரு வழிமுறையை கடைப்பிடித்து வருகின்றன.

இந்த வகையில் 1995ம் ஆண்டுக்கான போட்டியில் இலங்கையின் பிரதிநிதியே தெரிவாகி இருக்கவேண்டும். ஆனால் வேறோரு நாட்டுக்காக இலங்கை தனக்கு வரவேண்டிய உரிமையையும் விட்டுக்கொடுத்து போட்டியிலிருந்து விலகியமை, இவ்வளவு காலமும் ஐ. நா. பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறமுயற்சித்ததெல்லாம் வீணாகிப் போய் விட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளனர். கே-சி

# படகு கவிழ்ந்ததில் அறுபது பயணிகள் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்றுமுன் தினம் பத்துகாளி மாவட்டத்தில் மோட்டார் படகு ஒன்று கவிழ்ந்ததினால், குறைந்தது 60 பேர் மூழ்கிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 4 சடலங்கள் கிடைத்திருப்பதாகவும், மற்றவர்களைத் தேடும்பணி தொடர்கின்றன.

இந்த மோட்டார் படகில் 250க்கு மேற்பட்ட பயணிகள் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

# குடும்பச் சண்டை கத்திவெட்டில் முடிந்தது

(ஆனைப்பந்தி)

குடும்பச்சண்டை கத்திவெட்டில் முடிந்ததனால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அரியாலை டயஸ் குடியிருப்பில் கடந்த 4-ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் செ. தேவதாஸ் என்ற இளைஞன் தலையில் பலத்த வெட்டுக் காயத்திற்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

காயமடைந்த இவர் இரத்தம் ஒழுகிய நிலையில் வந்து யாழ். காவல் பணிமனையில் முறைப்பாடு செய்த பின்னர், வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இருவர் கைதாகியுள்ளதாக யாழ். காவல் நிலையத்தினர் தெரிவித்தனர். -101-சி

# குர்திஷ் போராளிகளுக்கு எதிரான துருக்கியின் தாக்குதல் முடிந்தது

(லண்டன்)

குர்தீஸ் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததாக துருக்கி அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இவ்இராணுவ நடவடிக்கைக்காக 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துருக்கி இராணுவத்தினர் வடஈராக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடஈராக்கிலிருந்து தனது கடைசித் துருப்புகள் வெளியேறிவிட்டதாக துருக்கிய பாதுகாப்பு அமைச்சர் மகமூத் போசான் அறிவித்துள்ளார்,

துருக்கியின் இவ்இராணுவ நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்கா உட்பட பல நாடுகள் கண்டனம் தெரிவித்ததை யடுத்து துருக்கி படையினரை வாபஸ்பெறும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கக் கூடும் என சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். க-சி

# இரவில் கசிப்பு காய்ச்சியோர் காவல்துறையிடம் சிக்கினர்

(உடுவில்)

இரவுவேளையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் காவல்துறையினரின் திடீர் நடவடிக்கையால் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலை தொடர்ந்து கொக்குவில் பகுதியில் உள்ள ஒரு வீட்டினை திடீரென சென்று சோதனையிட்ட காவல் துறையினர் கசிப்புக்காய்ச்சிக் கொண்டிருந்தஇரு வரைகைது செய்து கூட்டிச் சென்றுள்ளனர்,

காவற்துறையினரின் சோதனையின் போது வீட்டில் இருந்து ஆறு லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. 109

# ஓய்வூதிய கொடுப்பனவுகள் தாமதமின்றி வழங்கப்படும்

(உடுவில்)

வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் திரு, ந, குருசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் ஓய்வூதியர் திணைக்களக் கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் கலந்து கொண்டார்.

ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர் காலத்தில் காலதாமதமின்றி வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக அவர் கூட்டத்தில் உறுதியளித்தார்.

வடமாநில ஓய்வூதியர் சங்கத்தின் சம்மேளனத் தலைவர் திரு. சி வி. கே, சிவஞானம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாடுகள் சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் ஓய்வூதிய திணைக்கள அத்தியட்சகர், ஓய்வூதிய முரண்பாட்டு சபை ஆகியாருடன் சம்மேளனம் எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவகுக்கைகள் பற்றி எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் திரு. எஸ். விக்கினராசா, சமாதான நீதிபதி வி, இராசையா ஆசியோர் கலந்து கொண்டு உரையாற்றினர், 109-சி

# திரி போஷ மா வருகிறது

(கொழும்புத்துறை)

யாழ் சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் 'திரிபோஷா மா வந்துசேரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இத்திரிபோஷா மா'சீடான் சர்' கப்பல் மூலம் அடுத்த வாரமளவில் இங்கு எடுத்து வரப்படவுள்ளது என்று யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 154

# பரீட்சை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிராந்தியத்தில் பரிசாரகர்களாக தெரிவு செய்யப்பட்டு மூன்று மாத கால பயிற்சியை பெற்றுள்ள 48 சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு எழுத்துப் பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது, யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் இப் பரீட்சை நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது, செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 8ம் திகதியும் 9ம் திகதியும் நடைபெறவுள்ளது. 72

# கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் தற்போது சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதைக் கருத்திற் கொண்டு அப்பகுதிகளில் கால் நடைகளை கட்டாக்காலியாக அவிழ்த்துவிடுவதைத் தவிர்க்குமாறும் இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தென் மராட்சிப்பிரிவு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கால்நடை வளர்ப்போரை அறிவுறுத்தியுள்ளனர்.

இப்பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் பயிர்களை மேய்ந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. 109-சி

# கோழிகள் திருட்டு

(அரியாலை)

யாழ், அர்ச்சுனா வீதி இராசாவின் தோட்டப்பகுதிகளில் இரவு நேரங்களில் கோழிகள் திருடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை ச. ராசேந்திரம் என்பவருடைய வீட்டில் பத்துக்கு மேற்பட்ட கோழிகள் திருட்டுப் போயுள்ளதாக தெரிய வருகின்றது. 56

# கோயில் உண்டியல்களை உடைத்தவர் பிடிபட்டார்

(ஆனைப்பந்தி)

இரண்டு கோவில் உண்டியல்களை உடைத்து பணத்தை திருடிய நபரொருவர்காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த மாதம் 24ம் திகதி இணுவில் காரைக்கால் சிவன் கோவில் உண்டியிலிருந்து இருநூறு ரூபாவையும், மறுநாள் சண்டிலிப்பாய்-சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய உண்டியலிலிருந்து 875 ரூபாவையும் திருடிய நபரே கைதானவராவார்.

இந்நபரிடமிருந்து ஒரு தொகைப்பணம் மீட்கப்பட்டதுடன் இவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதாகவும் யாழ், காவல் நிலையத்தினர் தெரிவித்தனர். 101-சி

# தீவிரவாதிகள் தாக்குதலால் ஐந்து படையினர் பலி

(புதுடில்லி)

இந்தியாவில் அசாம் பகுதியில் தீவிரவாதிகள் நேற்றுமுன் தினம் காலை நடாத்திய தாக்குதல் ஒன்றில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் உட்பட 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்தனர்.

அசாமின் வடக்கே சச்சாங் என்னும் மலையடிவாரப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. பெருமளவு தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடாத்தினர்.

படையினர் ரோந்து வந்த போது இச்சம்பவம் இடம் பெற்றதாம். க-கி

# புற்றுநோயை குணப்படுத்த தடுப்பூசி மருந்து

(லண்டன்)

புற்றுநோயை குணப்படுத்த வல்ல தடுப்பூசி மருந்து ஒன்றை தாம் தயாரித்து இருப்பதாக அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

அமெரிக்காவை சேர்ந்தஇயற்கைமருந்துகள்குறித்த செயற்றிப்பு ஒன்றில் இந்த விஞ்ஞானிகள் சுண்டெலிமீதுபுற்று நோய்க்கட்டிகள் வளர்வதை இந்த தடுப்பூசியை செலுத்தி வெற்றிகரமாக தடுத்துவிட்டனர் என்றும் செய்தி வெளிடப்பட்டுள்ளது.

ஒரு வருடத்துக்குள் இந்த தடுப்பூசி மருந்து புற்றுநோய் வாய்ப்பட்ட மனித உடம்பில் செலுத்தப்பட்டு சோதனையும் மேற்கொள்ளப்படும். -கே-ரி

# கட்டாக்காலி நாய்களால் பாதசாரிகளுக்கு தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வீதிகளில் அனாதரவாகத்திரியும் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளால் பொதுமக்கள் தினமும் பலவகையான பாதிப்புக்குள்ளாவதாகப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் அனாதரவாகத் திரியும் கட்டாக்காலி நாய்கள் வீதியால் செல்லும் பாதசாரிகளைத் துன்புறுத்துவது மட்டுமல்லாது சைக்கிள்களில் செல்வோரையும் கலைத்துத் துன்புறுத்துவதைத் காணக்கூடியதாக உள்ளது. இரவு நேரங்களிலேயே இந்த நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டாக்காலி நாய்களினால் இரவு நேரங்களில் கடிக்கப்பட்ட பலர் விசர்நாயா இல்லையா என இனங்காண முடியாது வைத்தியசாலைகளில் சென்று விசர்நாய் கடி தடுப்பு ஊசிமருந்து ஏற்றுவதாகவும் தெரியவருகிறது 162,சி

## சுருக்கெழுத்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தபாலில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது,

இப்பரீட்சை இன்றும் நாளையும் வேம்படி உயர்தர பாடசாலையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -157-சி

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
15-ம் ஆண்டு நிறைவுக்

# கம்பன் விழா

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: விழாப் பந்தல்,
நல்லூர் கந்தசுவாமி கோவில்
வடக்கு வீதி.

காலம்: 1995 மே 06 சனிக்கிழமை
காலை 9-30 மணி.

★ மங்கள விளக்கேற்றல்; சிற்பச் சக்கரவர்த்தி
திரு. ஆ. ஜீவரத்தினம் அவர்கள்

★ கடவுள் வாழ்த்து; சங்கீத வித்துவான்
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள்

★ கம்பன் வாழ்த்து:

★ வரவேற்புரை:

★ தலைமையுரை:
திரு. சு. இரத்தினராசா B. A. அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

★ தொடக்கவுரை:
திரு. டொமினிக் ஜீவா அவர்கள்
(ஆசிரியர் மல்லிகை)

★ வாழ்த்துரை:
திரு. செ. சிவமகாராசா அவர்கள்

★ ஆய்வரங்கு;
தலைவர்; பண்டிதர் க. வீரகத்தி அவர்கள்
ஆய்வுப் பொருள்:
''சங்கமும், கம்பனும் இயற்கையைக்
கையாண்ட விதம்''
ஆய்வாளர்: பண்டிதர் க. சச்சிதானந்தன்

### மாலை 4-30மணி முதல்

★ மங்கள இசை;
திரு. பி. எஸ். பிச்சையப்பா, ரவி, ரஜி குழுவினர்

★ மங்கள விளக்கேற்றல்:
திரு. திருமதி சிவஞானம் அவர்கள்

★ கடவுள் வாழ்த்து:- சங்கீத வித்துவான்
திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின் அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை:

★ தலைமையுரை:
வைத்திய நிபுணர் திரு. வி. கருணாகரன் அவர்கள்

★ தொடக்கவுரை:
வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகள்
(தலைவர் தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை)

★ வாழ்த்துரை:
திரு. அ. பஞ்சலிங்கம் B. Sc அவர்கள்
(அதிபர் யாழ். இந்துக் கல்லூரி)

### பட்டிமண்டபம்

நடுவர்: திரு. இ. ஜெயராஜ்

பொருள்: ''குறள் நெறியில், அயோத்தியா காண்டத்தின் ஊடுபொருளாய்க் கம்பன் கொண்டது''

★ இல்லறச் சிறப்பே!

திரு. இரா. செல்வவடிவேல்
திரு. ஆறு. திருமுருகன் B. A
திரு. க.ஜெயநிதி

★ துறவற மேன்மையே!

திரு. தி. திருநந்தகுமார்
திரு. க. குமாரதாசன்
திரு. ச. மணிமாறன்

★ ஊழின் வலியே!

திரு. த. சிவகுமாரன்
திரு. த. சிவசங்கர்
திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

நோக்கர் குழுத் தலைவர்:

திரு. இ. மகேந்திரன் B. A. அவர்கள்
(அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி)
— நோக்கர்கள் வாக்களிப்பின் மூலம் ஓர் அணியை விலக்கல்

நடுவர் தீர்ப்பு

வாழ்த்துவோர்:

ஜெயா அழகு மாடம்

(அழகு சாதனங்களின் மொத்த, சில்லறை விற்பனையாளர்)
187, 177ஏ, இராசன் வீதி,
[ மின்சார நிலைய வீதி ]
யாழ்ப்பாணம்.

(ஏ-4913)

# வீடுகளில் தேனீ வளர்க்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்செயல்படுத்தி வரும்வீடுகளில் தேனீ வளர்க்கும் திட்டம் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தேனீ பெட்டிகளை வைத்திருப்பதையும், ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் பத்து முதல் பன்னிரண்டு போத்தல் தேனீ வருடமொன்றுக்கு எடுக்கக்கூடியதாக உள்ளதாகவும் அறியப்படுகிறது. தேனீக்கள் பழமரங்களில் மகரந்தச் செய்கை ஏற்படுத்துவதனுல் கனிவளமும் பெருகக் கூடியதாக இருக்கிறது.

தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்புபவர்களுக்கு ராணி தேனீயுடன் தேன்பெட்டிகளை கொடுத்துஉதவுதுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயப் பகுதியினரின் தேனீ வளர்ப்பு பிரிவு கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவுத்துறை சிறந்தது

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு இயக்கம் இன்று மீண்டும் பிரதேச ரீதியாக முக்கியத்துவம் பெற்றுவருகிறது. எமது பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவுத்துறை சிறந்த துறையாக உள்ளது. எனவே சிறந்த முகாமைத்திறனுடனும் நிதி நிர்வாகம், கொள்வனவு என்பவற்றில் திறன்வாய்ந்தவர்களாக நிர்வாகிகள் இருக்கவேண்டும்

இவ்வாறு நவீன ஆளணிக் கொள்கை தொடர்பிலான வேலைக்களத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கூறினுர்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் வேலைத்தளத்தை சர்வதேச தொழில் ஸ்தாபனமும், அகில உலக கூட்டுறவு இணைப்பு நிறுவனமும் இணைந்து நடாத்தின.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இன்று தொழில்வாய்ப்புஇல்லை ஆனுல் பணவசதிகூட இருக்கிறது. தொழில் வாய்ப்புகள் இன்றி பணம் இருந்து எந்தவிதமான பிரயோசனமும்இல்லை எனவே நவீன முகாமைத்துவத்தின்கீழ் கூட்டுறவுத்துறை போதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இவ்வேலைத் தளத்தை இலங்கை கூட்டுறவு முகாமை உசாத்துணைவர் திரு. சி. கோணேஸ்வரன்நெறிப்படுத்தி நடத்தினுர். கூட்டுறவு நிறுவனங்களைச் சேர்ந்த பொது முகாமையாளர்கள், ஆளணி முகாமையாளர்கள் இவ்வேலைத்தளத்தில் கலந்து கொண்டனர்,

# ம. தி. மு. க. உறுப்பினர் சிறையில் தாக்கி கொலை

(சென்னை)

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த ம.தி மு.க, உறுப்பினர் ஒருவர் நேற்றுக்காலை பொலிசாரால் தாக்கப்பட்டு பலியானுர்.

தமது உறுப்பினர் கொலை விடயத்தில் தேசிய மனித உரிமைகள் கமிஷன் தலையிட வேண்டுமென்று ம. தி. மு. க பொதுச்செயலாளர் வை கோபாலசாமி கேட்டுள்ளார்.

தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஹர்த்தாலை அடுத்து இந்தஇளைஞர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

# 1990க்குப் பின்னர் 99 தமிழக மீனவர்கள் இல. படையினரால் கொலை

(சென்னை)

1990 ம் ஆண்டிற்கு பின்னர் 99 தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் படுகாயமடைந்துள்ளனர் என்று தமிழ்நாடு மீனவர் பேரவைத் தலைவர் இரா அன்பரசு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுக்கு இதுவரை எந்த இழப்பீடுகளும் தமிழக அரசால் வழங்கப்படவில்லை. சிறிலங்கா படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை நிறுத்தி நிரந்தர தீர்வுகான உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சர்வதேச அளவில் ஐ நா. மனித உரிமைக் கவுன்சிலில் இந்தப் பிரச்னையை எழுப்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ரி

# விமானசேவை மோசடிகள் விசாரணை செய்யப்படும்

(கொழும்பு)

விமான நிலைய விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி நடவடிக்கைகள் அனைத்தும் விசாரணைசெய்யப்படுமென்று தொடர்பு சாதன சுற்றுலா விமானப்போக்குவரத்துதுறை அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந் நிறுவனத்தில் நிர்வாக நிதி செயற்பாட்டுத்துறைகளில் முன்னர் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஒரு தனிநபர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. -ரி

# இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவினுல் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டியின் 3ம் இடத்துக்கான ஆட்டம் இன்று மாலை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் யங் கென்ரீசியன் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய கழகம் மோதும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இதே மைதனத்தில் நடைபெறவிருக்கும் இறுதியாட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து யங்ஸ்ரேயல் அணி மோதும். வி ரி

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரடைந்ததும் அரசு அரசியல் தீர்வை முன்வைக்கும்.

மோதல் ஆரம்பித்த பின் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசுபுலிகளுடன் தொடர்பு கொண்டதா எனக் கேட்கப்பட்ட போது, நேரடியாகவோ மூன்ரும் தரப்பு மூலமோ புலிகளுடன் எதுவிததொடர்பும் மேற கொள்ளப்படவில்லை என்ருர்.

இனப்பிரச்னைதீர்வு குறித்து ஏனைய கட்சிகளுடன் அரசு பேச்சு நடாத்திவருகிறதெனவும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாதெனவும் அவர் கூறினுர்.

விடுதலைப்புலிகளுடன் சேர்ந்தோ அல்லது அந்தஇயக்கம் இல்லாமலோ அரசு தொடர்ந்தும் சமாதானமுயற்சிகளை மேற்கொள்ளுமென ஜனுதிபதி சந்திரிகா வலியுறுத்தியுள்ளதாகவும் கூறினுர்.

தற்போதைய நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாமலே அரசியல் தீர்வு காணப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கைமேற்கொண்டால் அரசும் இராணுவத்தைக் கொண்டு பதிலடி கொடுக்கும். அரசு தற்போது பல புன் முயற்சிகளை எடுத்துவருவதாகவும் அவற்றை இப்போது தெரிவிக்க முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

வேறு நாடுகளிடமிருந்து இராணுவ உதவி எதையும் இலங்கை நாடியிருக்கிறதா அல்லது பெற்றிருக்கிறதா என்பது பற்றி கருத்துக்கூற அவர் மறுத்துவிட்டார். [சி-ரி]

## நீண்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது கடமையிலிருக்கும் பாதுகாப்பு அதிகாரிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் புலிகளை தோற்கடிக்க உதவி வழங்குவர்.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலிலிருந்த மூன்று மாதங்களில் படையினர் மிகச் சிறப்பாக நடத்துள்ளனர் எனவும் கூறினுர்.

கொழும்புக்கு வந்திருப்பதாக தகவல் கிடைத்துள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களை தேடிக்கண்டுபிடிப்பதற்கான சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலிஸாரும் இராணுவத்தினரும் கொழும்பில் புலிச் சந்தேக நபர்களைக் கைது செய்து விசாரணைகள் செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறினுர். வி-சி-ரி

# ★ ராணுவ நடவடிக்கைகளை கைவிட்டு அரசும்-புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டும்

## அரச சார்பற்ற அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

''அரசும்-விடுதலைப் புலிகளும் முழு அளவிலான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானத்துக்கான இணக்கப்பாட்டை அடைவதற்கான அடிப்படைப் பிரச்னை குறித்து ஆராய முற்படவேண்டும்''

இவ்வாறு இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது, மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளும் - அரசும் உடன் நிறுத்தி நான்கு வார மோதல் தவிர்ப்பை கடைப்பிடித்து இதன்மூலம் அடிப்படைப் பிரச்னைகளை ஆராய முழு அளவிலான யுத்த நிறுத்தம் முதலில் மேற்கொள்ளப் படவேண்டும்,

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முதலில் இரு பகுதியினரும் தத்தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டுமென்ற இலங்கை சமாதான இயக்கத்தின் கோரிக்கையை நாம் ஆதரிக்கின்றோம். இருசாராரும் சுதந்திரமான மத்தியஸ்தம் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பொதுநலவாய அமைப்பு அல்லது பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றொரு அமைப்பின் ஊடாக இந்த மத்தியஸ்தத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வி-ரி

# எண்ணாயிரம் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

மேலும் எண்ணாயிரம் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப் படவுள்ளார்கள். இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

முன்னர் 4330 ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், ஆசிரியர்பற்றாக்குறைமேலும் நிலவுவதாககல்வி அமைச்சர் அமைச்சரவைக்குசுட்டிக் காட்டியதை தொடர்ந்து மேலும் 3470 புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்கள், நியமனம் கிடைக்கும் இடங்களில் தொடர்ந்து 4 வருடங்கள் சேவையாற்ற வேண்டும் இதன் பின்புதான் இடமாற்றம் பெறுவதற்கு இவர்கள் தகுதியுடையவர்களாகக் கருதப் படுவார்கள், என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது,

வி-ரி

# ஒட்டமாவடி தாக்குதலில் ஆறு இராணுவம் காயம்

[மட்டுநகர்]

மட்டக்களப்பு ஒட்டமாவடியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுத்திற்குமிடையே கடந்த புதன்கிழமை இடம் பெற்ற மோதலொன்றில் ஆறு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

ஒட்டமாவடி மூக்கர்குளம் என்ற இடத்தில் தேடுதல் நடவடிக்கைக்காக காலைவேளையில் சென்ற இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலிலேயே இந்த இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

காலை முதல் நண்பகல் வரை மூக்கர்குளம் பகுதியில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் ஷெல் தாக்குதல் சத்தங்களும் கேட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

[ரி]

# தமிழ்நாடு வழியாக புலிகளுக்கு ஆயுதம்

(சென்னை)

தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக செயல்பட்டு வருவதாக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழ்நாட்டின் வழியாக புலிகளுக்கு ஆயுதங்களும் டீசலும், பெற்றோலும் கடத்தப் பட்டு வருகின்றன என்று மாநில அரசை தான் பல தடவை எச்சரிக்கை செய்ததாகவும் ஆனால் மாநில அரசு அதை உதாசீனப்படுத்திவிட்டது என்றும் கூறினார்.

இந்த விடயத்தில மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுசகவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

-ரி

## கொழும்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வடிக்கைகள் அனைத்தும் கடுமையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ ரி

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு செல்வதாயின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் படவேண்டுமென உத்தர விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

## புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:

சிறிலங்கா இராணுவம் ஒரு கட்டுக்கோப்பு மிகுந்த இராணுவமாகும். நன்கு பயிற்சி பெற்று ஒழுக்க நெறியைப் பின்பற்றும் இராணுவமாகவும் எமது இராணுவம் இருக்கிறது.

# வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 27ம் திகதியன்று விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும இடையே யாழ்பபாணத்தில் இடம் பெற்ற நேரடி மோதலில் மூன்று போராளிகள் வீரச் சாவை தழுவிக்கொண்டனர்,

மேஜர் செங்கோளன் அல்லது காமினி (பெரியசாமி நிரஞ்சன்குமார், கிளிநொச்சி, கப்டன் புகழேந்தி (கணபதிப் பிள்ளை தவராசா. புத்தூர்), கப்டன் பூங்குன்றன் அல்லது மயூரன் குமாரவேல் ஜெயசூரிடன், தம்பாட்டி, நாவற்குழி குடியேற்றத் திட்டம்) ஆகியோரே வீரச்சாவை தழுவியவர்கள் ஆவர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

-ரி

# 'நரோமா கப்பல்' பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

இன்று 06ம் திகதி நரோமா கப்பலில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் இன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்திற்கு தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

-ரி

# கிழக்கு மாகாணத்தில் கண்ணி வெடிகளை அகற்ற தமிழரை கேடயமாக்கும் படையினர்!

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை கேடயமாக பாவித்து கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வருவதாக தமிழ் அரசியல் வாதிகள் தெரிவித்ததாக பி பி ஸி. தெரிவித்தது.

இதேவேளை மட்டக்களப்பு கிரான் கொம்மாந்துறை, ஏறூவூர் பகுதிச் சோதனை முகாமகளில் கடந்த புதன் கிழமை பஸ்ஸில் சென்ற பயணிகள் படையினரால் தாக்கப்பட்டனர்.

கிரானில் சுற்றிவளைப்பு நடத்திய படையினர் தமிழர்கள் பலரைப்பிடித்துச்சென்றுள்ளனர்.

கடந்த மேதினத்தன்று அம்பாறை-கல்முனை நகரைச் சுற்றி வளைத்த பொலிஸ் அதிரடிப் படையினர் 45 தமிழர்களை பிடித்துச் சென்றனர்.

இவர்கள் காரைதீவு அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செலலப்பட்டனர்.

இதேவேளை மட்டு. புதுக்குடியிருப்பு கிராமத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அக் கிராமத்தைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைப் பிடித்துச்சென்று விசாரணை செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப் படும் தமிழர்களை கேடயமாக்கி நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் முயற்சிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பகுதி மக்கள் பதற்றத்துடன்வாழ்கிறார்கள்.

## தாக்குதல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தற்கு அரசுசார்பில் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை

இராணுவப் பேச்சாளரான சரத்முனசிங்க இதுபற்றி தெரிவிக்கையில் புலிகளுக்கு எதிராக போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. பல்வேறு கட்டங்களில் இந்தப் போர் நடவடிக்கைகளை மேற்வதற்கு திட்டங்களும் தயாரிக்கப்படட்டுவிட்டன.

இதேவேளையில் வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் போர் நடவடிக்கைகள் எப்போது எந்த இடத்தில்ஆரம்பமாகும் என்ற விபரங்களை தெரிவிக்க அவர் மறுத்து விட்டனர்.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அந்த விபரங்களை அவளியிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இ-ரி

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் 1995 தொடர்பான அதிபர்களுக்கான கலந்துரையாடல்கள் இன்று காலை 9-00 மணிக்கு கரவெட்டி கோட்டத்துக்கு நெல்லியடி ம. வி. யிலும், பருத்தித்துறை கோட்டத்துக்கு மு. ப. 11-00 மணிக்கு வேலாயுதம் ம. வி. யிலும் நடைபெறவுள்ளன

-ரி

# தொழில் வங்கி பதிவு நிறைவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையின் மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்கும் தொழில் வங்கியின் வங்கியின் முதற்கட்டபதிவு வேலைகள் இம்மாதம் 10ம் திகதியுடன் நிறைவு பெறும்.

மீண்டும் பதிவு வேலைகள் ஆரம்பிக்கும் திகதி பத்திரிகை வாயிலாக அறியத்தரப்படும் என்றுதமிழீழநிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்தார்.

- ரி

# அடுத்த நடவடிக்கை குறித்து இலங்கை அரசு குழப்பத்தில்!

(கொழும்பு)

''இலங்கை அரசின் போர் விமானங்களை விடுதலைப்புலிகள் சுட்டுவீழ்த்தும் பலத்தை தற்போது பெற்றுவிட்ட போதிலும் அரசு இப்புதிய பிரச்னையை எப்படிகையாளப் போகின்றது என்பது பற்றி எதுவும் கூறாதிருக்கிறது''.

இவ்வாறு பி.பி.ஸி. நேற்று தெரிவித்தது. இது பற்றி பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையின் தற்போதைய நிலை மிகவும் கவலைக்குரியது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இலங்கையில் திடீரென ஏற்பட்ட பதற்ற நிலையினால்தான் ஜனாதிபதி திருமதி சந்திரிகா சார்க் மாநாட்டை இடையில் விட்டு நாடு திரும்பினார். அமைச்சர் பீரிஸ் நியூசிலாந்து பயணத்தை ரத்துச்செய்தார். நாட்டு மக்கள் அனைவரும் ஒருவித பதற்றத்துடன் காணப் படுகின்றார்கள். வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களின் வருங்கால நிலை என்ன?

இவற்றைப் பற்றியெல்லாம் கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகள் இரவு-பகலாக கூட்டம் கூடி பேசி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதுபோல் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில அமைச்சர்கள் நடந்து கொண்டார்கள். அரசின் வருங்காலத் திட்டம் என்ன? என்று பல பத்திரிகையாளர் கட்டாயப் படுத்தி கேட்டபடியினால்தான் அமைதிகாண அரசு உறுதி பூண்டுள்ளபோதிலும், விடுதலைப்புலிகளை இராணுவம் பலம்கொண்டு எதிர்க்கும்'' என்று கூறினார்.

ஆனால் அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்ற திட்டம் அரசிடம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அரசாங்கம் முழுமையாகவே வழிதவறிவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

## கம்பன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், வண. ஆயர் மெதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோர் வழங்கினார்கள். வரவேற்புரையை வணபேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் வழங்க, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையுரை நிகழ்த்தினார். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரை வழங்கினார்.

விழா ஆரம்பத்தில் முதறிஞர் கௌரவிப்பு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டிற்கான மகர யாழ் விருது வழங்கும் வைபவம் இடம் பெற்றது. யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் மகர யாழ் விருதைவைத்தியக்கலாநிதி து. வி. ஜெயகுலராசாவுக்கு வழங்கினார்.

162-ரி

## ராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரான லக்கி அல்கம முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு விசுவாசமாக செயல்பட்டவராவர். லக்கி அல்கமவின் பதவிக்கு தற்போதைய பிரதி தலைமையக அதிகாரி ரோகான் தழுவத்த நியமிக்கப்படவுள்ளார்.

இவர் வடபிராந்திய இராணுவ தளபதியாக இருந்தபோது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல்களால் இராணுவத்துக்கு ஏற்பட்ட பெரும் தோல்விகள் காரணமாக இராணுவ நீதிமன்றில் பலத்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டவராவார். -ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.